## October 9, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஈரோடு மாவட்டத்தில் உள்ள நாகமலை குன்றை தமிழகத்தின் 4-ஆவது பல்லுயிர் பாரம்பரியத் தலமாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இது குறித்து தமிழக சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:
   i. தமிழகத்தில் உள்ள பல்லுயிர்களைப் பாதுகாக்க மாநில அரசு சார்பில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் காரணமாக, 20 ராம்சர் தலங்களுடன், நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான தலங்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழகம் உள்ளது. அதேபோல், அரிய, அச்சுறுத்தலுக்கு உள்ளான மற்றும் அழிந்துவரும் உயிரினங்களைப் பாதுகாக்கவும், அவற்றின் இனப் பெருக்கத்தை அதிகரிக்கவும் ஏற்ற பகுதிகள் பல்லுயிர் பாரம்பரியத் தலங்களாக அறிவிக்கப்பட்டு வருகின்றன.
   ii. அதன்படி, கடந்த 2022-ஆம் ஆண்டு மதுரை மாவட்டம் அரிட்டாபட்டி, நிகழாண்டில் திண்டுக்கல் மாவட்டம் காசம்பட்டி, ஈரோடு மாவட்டம் எலத்தூர் ஏரி ஆகிய இடங்கள் பல்லுயிர் பாரம்பரியத் தலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அதைத்தொடர்ந்து ஈரோடு மாவட்டத்தில் உள்ள நாகமலை குன்றை மாநிலத்தின் 4- ஆவது பல்லுயிர் பாரம்பரியத் தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
   iii. மொத்தம் 32.22.50 ஹெக்டேர் பரப்பில் அமைந்துள்ள நாகமலை குன்று, இடம்பெயரும் மற்றும் உள்ளூர் பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள், ஈரநிலச் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கான முக்கிய வாழ்விடமாக உள்ளது.
   iv. இங்குள்ள ஆழமான நீர்நிலைகள், சேற்று நிலங்கள் மற்றும் பாறை மேடுகள் பல்வேறு உயிரினங்களுக்கு பாதுகாப்பான சூழலை வழங்குகின்றன.
   v. கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தமிழக ஒருங்கிணைந்த பறவைகள் கணக்கெடுப்பின்படி, நாகமலை குன்றில் 138 தாவர இனங்கள், 118 பறவை இனங்கள் (30 இடம்பெயரும், 88 உள்ளூர்), 7 பாலூட்டிகள், 11 ஊர்வனங்கள், 5 சிலந்திகள் மற்றும் 71 பூச்சியினங்கள் காணப்படுகின்றன.
   vi. இதில் பெரிய புள்ளிகள் கொண்டகழுகு, வெளிறிய பூனைப் பருந்து, பென்னெல்லிஸ் கழுகு போன்ற அரிய பறவை இனங்களும் உள்ளடங்கும்.
   vii. அதேபோல், இரும்பு காலத்தைச் சேர்ந்த கற்குவை வட்டங்கள், பாறை மறைவிடங்கள், பழங்கால கலைப்பொருள்கள் உள்ளிட்டவையும் இப்பகுதியில் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், இப்பகுதியில் தொல்லியல் துறையால் பதிவு செய்யப்பட்ட 400 ஆண்டுகள் பழைமையான ஆஞ்சனேயர் சுவாமி கல்வெட்டு இதன் பாரம்பரியத்தை எடுத்துரைக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2. இந்திய விமானப்படை கடந்த 1932-ஆம் ஆண்டு அக்டோபர் 8- ஆம் தேதி அதிகாரபூர்வமாக நிறுவப்பட்டது. 93-ஆவது விமானப் படைதினம் உத்தர பிரதேச மாநிலம் ஹிண்டன் விமானப்படைத் தளத்தில் கொண்டாடப்பட்டது.
3. இந்தியாவுக்கான அடுத்த அமெரிக்க தூதராக அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்த செர்ஜியோ கோரை (38) நியமனம் செய்ய அமெரிக்க நாடாளுமன்ற மேலவை (செனட்) ஒப்புதல் அளித்தது.
4. ஜப்பான், பிரிட்டன், ஜோர்டான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூன்று ஆராய்ச்சியாளர்களுக்கு வேதியியல் துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.
   i. உலோக-கரிம கட்டமைப்பு உருவாக்கத்துக்காக, கடந்த 1989-ஆம் ஆண்டில் இருந்து மேற்கொண்டுவரும் பணிகளை அங்கீகரிக்கும் வகையில் மூவருக்கும்

இப்பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

ii. ஸ்வீடனின் ஸ்டாக்ஹோம் நகரில் உள்ள நோபல் தேர்வு கமிட்டிகளில் ஒன்றான அறிவியலுக்கான ராயல் ஸ்வீடன் அகாதெமி வெளியிட்ட அறிவிப்பில், 'ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழகப் பேராசிரியரான பிரிட்டனைச் சேர்ந்த ரிச்சர்ட் ராப்சன் (88), ஜப்பானின் கியோடோ பல்கலைக்கழக பேராசிரியர் சுசுமு கிடாகவா (74), அமெரிக்காவின் கலிஃபோர்னியா பல்கலைக்கழகப் பேராசிரியரான அமெரிக்க-ஜோர்டான் ஆராய்ச்சியாளர் ஒமர் எம். யக்ஹி ஆகியோர் வேதியியல் துறைக்கான நோபல் பரிசுக்குத் தேர்வாகியுள்ளனர்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

iii. 'மூன்று வேதியியலாளர்களும் உலோக-கரிம கட்டமைப்பு எனும் புதியவடிவிலான மூலக்கூறு கட்டமைப்பை உருவாக்கியுள்ளனர். இடைவெளிகளுடன் கூடிய இந்த மூலக்கூறு கட்டமைப்பில் வாயுக்களும், இதர வேதிப்பொருள்களும் கடந்து செல்ல முடியும்.

iv. மகத்தான ஆற்றல் கொண்ட இக்கட்டமைப்பை பாலைவனக் காற்றில் இருந்து தண்ணீரை எடுக்கவும், கரியமில வாயுவைப் பிரித்தெடுக்கவும், நச்சு வாயுக்களைப் பாதுகாப்பாகச் சேமிக்கவும், வேதி வினைகளை ஊக்குவிக்கவும் பயன்படுத்த முடியும்' என்று நோபல் கமிட்டி தெரிவித்துள்ளது.

v. கடந்த ஆண்டில் புரதங்களின் கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு ஆய்வுக்கான வலுவான தொழில்நுட்பங்களைக் கண்டறிந்ததாக மூன்று விஞ்ஞானிகளுக்கு வேதியியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டிருந்தது. கடந்த 1901 முதல் 2024 வரை இத்துறைக்கான நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானிகளின் எண்ணிக்கை 195 ஆகும்.

vi. கடந்த 1896-இல் மறைந்த ஸ்வீடனின் பெரும் பணக்காரரும், டைனமைட்டை கண்டுபிடித்தவருமான ஆல்ஃபிரட் நோபலின் நினைவு தினமான டிச.10-ஆம் தேதி ஸ்டாக்ஹோமில் நடைபெறும் நிகழ்ச்சியில் பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

5. தெருக்கள், சாலைகள், நீர்நிலைகளில் ஜாதிப் பெயர்களை நவ.19-க்குள் நீக்க வேண்டும் என்று தமிழக அரசு உத்தர விட்டுள்ளது. இதற்கான உத்தரவை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை வெளியிட்டுள்ளது.

i. சாலைகள், தெருக்களின் பெயர் மாற்றப்பட்ட பிறகு, அவற்றில் வசிக்கக்கூடிய மக்களின் ஆவணங்களிலும் உரிய முறையில் மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. மகாராஷ்டிர மாநிலம், நவிமும்பையில் ரூ.19,650 கோடி மதிப்பீட் டில் 1,160 ஹெக்டேர் பரப்பளவில் உலகத் தரத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள சர்வதேச விமானநிலையத்தின் முதலாவது முனையத்தை பிரதமர் மோடி திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

i. மொத்தம் நான்குமுனையங்களுடன் கட்டமைக்கப்பட உள்ள நவி மும்பை விமானநிலையம், ஆண்டுக்கு 9 கோடி பயணிகள் மற்றும் 32.5 லட்சம் மெட்ரிக்டன் சரக்குகளைக் கையாளும் திறனுடன், ஆசியாவிலேயே மிகப் பெரிய விமானநிலையங்களில் ஒன்றாக விளங்கும்.

ii. நவிமும்பை புதிய விமான நிலையத்தை நிர்வகிக்கும் நிறுவனத்தில் அதானி நிறுவனத்துக்கு 74 சதவீத பங்கும், மகாராஷ்டிர அரசுக்கு 26 சதவீத பங்கும் உள்ளது.

7. கோல்ட்ரிஃப் இருமல் மருந்தை தயாரிப்பு செய்யும் காஞ்சிபுரம் ஸ்ரீசன் பார்மா நிறுவனத்தின் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும், அடுத்த வாரத்தில் அதன் உரிமம் ரத்து செய்யப்பட உள்ளதாகவும் மாநில மருந்து கட்டுப்பாட்டு

இயக்ககம் தெரிவித்துள்ளது.

i. மத்திய பிரதேச மாநிலம், சிந்த்வாரா மாவட்டத்தில் 17 குழந்தைகள் மணத்துக்கு காரணமானதாக கருதப்படும் கோல்ட்ரிஃப் இருமல் மருந்தைத் தயாரித்த நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்குமாறு அந்த மாநில மருந்து கட்டுப்பாட்டு வாரியம் தமிழகத்துக்கு கடந்த 1-ஆம் தேதி கடிதம் அனுப்பியது.

ii. அதில், டை எத்திலீன் கிளைசால் எனப்படும் நச்சு ரசாயனம், கோல்ட்ரிஃப் மருந்தில் 48.6 சதவீதம் இருப்பது கடந்த 2-ஆம் தேதி கண்டறியப்பட்டது.

iii. இதையடுத்து, தமிழகம் முழுவதும் கோல்ட்ரிஃப் மருந்து விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டது.